
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1242

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

67

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ஏழைகள் பக்கம் நின்ற காவல்காரன்!

1990-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் வந்த திரைப்படம் இது. ஆதிக்க குணம் கொண்ட பண்ணையாரால் பாதிக்கப் படும் ஏழை விவசாயிகளைக் காப்பதற்காகப் பொதுவுடைமைச் சிந்தனையும் போர்க்குணமும் கொண்ட விவசாயி சிவா (நாசர்) கிளர்ந்து எழுகிறான். அதனால் பண்ணையாரால் பாதிக்கவும் படுகிறான். இந்தப் போராட்டத்தில் காக்கிச் சட்டையணிந்த காவலரான திலீபன் (பிரபு) விவசாயிகள் பக்கம் நின்று பண்ணை ஆதிக்கத்தை முறியடிக்க உதவுகிறான். இதுவே படத்தின் கதை.

காவல் துறை, ஆதிக்கவாதிகளுக்குத் துணையாக நிற்பதுதான் வழக்கம். ஆனால், கலைஞரின் காவல்காரர், ஏழைகளின் பக்கம் நிற்கிறார்! அப்படி நிற்பதுதான் சரி என்று கலைஞர் படைத்துக் காட்டிய திரைப்படம்தான் காவலுக்குக் கெட்டிக்காரன். அதனை அவரே திரையில் தோன்றி சொல்லவும் செய்கிறார்.

"வணக்கம். என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே வணக்கம்.

நடுநிலை தவறாத காவல் துறை நண்பர்கள் தான் சமுதாயத்தின் கண்கள் எனும் கருத்தை நாடகத்தில், திரைப்படத்தில் நான் பல நேரங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

இந்தப் படம் அதே இழையில் கோர்க்கப் பட்ட வித்தியாசமான ஓர் ஒளிமுத்து. கோழையும் கொடுமைகளை அடுக்கடுக்காகக் காணும்பொழுது வீரனாகிறான். அந்த வீரன், வேசம் போட்டு மக்களை வேட்டையாடி வாழும் வீணர்களை, சமுதாயத் துரோகிகளை வேரோடும், வேரடி மண்ணோடும் பெயர்த் தெரிய விஸ்வரூபம் எடுக்கிறான் என்பதை இந்தக் கதையின்மூலம் விளக்கியிருக்கிறேன். அதுதான் காவலுக்குக் கெட்டிக்காரன். என் சிந்தைக்கினிய தமிழால் பிரபுவின் தந்தைக்கும் வசனம் எழுதினேன். இதோ இப்போது தம்பி பிரபுவுக்கும் எழுதியிருக்கிறேன். புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை ஒரு புதிய பாத்திரமேற்று தம்பி பிரபு இந்தப் படத்தில் நிரூபிக்கிறார். திரைக்கூடம் வெளி யிடும் இந்தத் திரைப்படம், இயக்குநர் சந்தான பாரதியின் கைவண்ணம், தம்பி கவிஞர் இளைய பாரதியின் கவிதை தேன்கிண்ணம். இசைஞானியின் சங்கீதப் பனிமழை, அரங்க சாமியின் ஒளி மழை. இந்த இனிய கூட்டுமுயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன் வணக்கம்" என்று உரை நிகழ்த்தி இருப்பார்.

எப்போதுமே கலைஞருக்கு மன்னராட்சி மீதும், கிராமப்புற ஆதிக்கவாதிகளான பண்ணையார்கள், ஜமீன்தார்கள் மீதும் ஒரு கோபமும் எதிர்ப்புணர்வும் இருந்து வந்திருப்பதை அவரது திரை எழுத்துகளில் பார்க்கலாம். அவரது தொடக்ககால சரித்திரத் திரைப்படங்களில் இருந்து பிற்காலத் திரைப் படங்கள் வரை அனைத்திலும் இதனைக் காண முடியும். 'மந்திரி குமாரி', 'அரசிளங்குமரி', 'குறவஞ்சி', 'மணிமகுடம்', 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' போன்ற படங்களில் மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி மலர வேண்டும் என்று வசனம் எழுதியிருந்தார். 'வண்டிக்காரன் மகன்', 'குலக்கொழுந்து' போன்ற படங்களில் ஜமீன் எதிர்ப்பு என்பது மிகத்தீவிரமாக வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

அது போலத்தான் 'காவலுக்குக் கெட்டிக் காரன்' திரைப்படத்தில் பண்ணையாரின் பாரம்பரியப் பெருமை, குலப்பெருமை போன்ற விசயங்களை எதிர்த்தும் விமர்சித்தும் கலைஞர் வசனம் எழுதியிருப்பார்.

### எதிர்ப்பும் விமர்சனமும்

எடுத்துக்காட்டாக, காவல் நிலையத்திற்குப் பண்ணையார் பாலையா வந்து, சிவாவையும் திலீபனையும் விடுவிக்கும் காட்சியில்,



**பாலையா:** போங்க, போங்க... இனிமேலாவது போராட்டம், புரட்சி கிரட்சின்னு பண்ணிக்கிட்டு அலையாதீங்க. என்னை மாதிரி ஆளுகளோட 'கை'யைப் பலப்படுத் துங்க!

மகனிடம் பெயரைக் கேட்பான் திலீபன். அதற்கு அவன், 'லெனின்' என்பான்.

**திலீபன்:** அடேங்கப்பா! புரட்சிகரமான பேரெல்லாம் வச்சுருக்கீங்க?

**சிவா:** 'புரட்சிங்கிற வார்த்தையைச் சொல்லாதீங்க! ஒரு காலத்துல அதுக்கு மதிப்பு இருந்துச்சு. இப்ப அது சீரழிஞ்சு போச்சு' என்று வருத்தத்துடன் சொல்கிறான்.


இந்தக் காட்சியும் கலைஞரின் வசனமும் மிகவும் யதார்த்தமாக அமைக்கப்பட்டிருக்கும்.

அடுத்து, விவசாயிகளது கூட்டத் தில் சிவா பேசும் காட்சியில்...

**சிவா:** உழுகிறது நாம, உழைக் கிறது நாம, வெளைச்சல் வேற ஒருத்தனுக்கு! பாடுபட்டவனுக்குப் பசியக் கொடுத்திட்டு, பலனை பாலையா அனுபவிக்கிறான்.

நம்ம மண்ணுல விளையிற நெல்ல கொறச்ச வெலைக்கு மிரட்டி வாங்கிக்கிறான். இனிமே, அவன் மிரட்டலுக்கு நாம பணியக் கூடாது. ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக் கோ ங்க.





படங்கள் உதவி : ஞானம்

**ஏட்டு மன்னார் (எஸ்.எஸ்.சந்திரன்):** 'கைய்யப் பலப்படுத்துனா கிழிஞ்சுரும்' என கிண்டலாகச் சொல்வதுடன், ஜெயிலில் இருந்து வெளியே வரும் திலீபனிடம், 'பாலை யாவை நம்பாதே! சரியான நச்சுப் பாம்பு' என சிவா எச்சரிக்கை செய்வான்.

திலீபனும் சிவாவும் வீட்டுக்குத் திரும்பிய போது, வீட்டில் சிவாவின் மனைவி செல்லக்கிளி (மாதுரி) கோபமாக வரவேற்கிறாள்.

**செல்லக்கிளி:** வாங்க, உங்களுக்கு வீடு, வாசல், புள்ளகுட்டி இருக்கிறதெல்லாம் மறந்து போச்சா? ஊரு, சீர்திருத்தம்னு சொல லிட்டு எத்தனை வாட்டிதான் ஜெயிலுக்குப் போகப்போறீங்க? இத எப்பதான் விட்டுத் தொலைக்கப் போறீங்களோ!

**சிவா:** இந்தா, வந்ததும் வராததுமா மேல பாயுறியே, விருந்தாளியோட வந்திருக்கேன்...

**செல்லக்கிளி:** நீங்க என்ன இவரோட ஜெயில் தோழரா? நீங்க ஏங்க இவரோட சேர்ந்து கெட்டுப்போறீங்க?

**சிவா:** ஏய், வழவழன்னு பேசிக்கிட்டு, 'இவரு பேரு பார்த்திபன், இந்த... கல்வெட்டு ஆராய்ச்சியெல்லாம் பண்றாங்கல்ல, அதுக்கு வந்திருக்காரு. இனிமே நம்ம வீட்டுலதான் தங்கப்போறாரு' எனக் கூறி அழைத்துச் செல்வான். அங்கு ஓடிவரும் சிவாவின்

> தனது ஆட்சிக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் ஒழியவும் கூலி ஏழை மற்றும் குத்தகை விவசாயிகள் சுதந்திரம் பெற்று நிம்மதியாக வாழவும் சட்ட திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர், கலைஞர்.

வீரன் ஒரு நாள்தான் சாவான். கோழை தெனம் தெனம் சாவான்.

**விவசாயி:** ஆமா, சிவா சொல்றதுதான் கரெக்ட்டு, ரெண்டுல ஒண்ணு பார்த்திருவோம்.

**மற்றொரு விவசாயி:** ஏய், இளங்கன்று பயமறியாதுன்னு சொல்வாங்க, நீ பாட்டுக்குப் பேசிட்டுப் போயிருவே, நாளைக்கு எங்களுக்கு ஒண்ணு ஆயிருச்சுன்னா, கொழந்த குட்டிகளுக்கு யாரு பதில் சொல்றது?

**சிவா:** ஆமாய்யா, இப்படிப் பயந்து பயந்து ஆயுசுக்கும் அடிமையா இருந்தே சாவுங்க. வெள்ளைக்காரன்கிட்ட இருந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கெடச்சாச்சு. ஆனா, பாலையா இருக்கிற வரைக்கும் இந்த பலிகொடுத்தான்பட்டிக்கு விடுதலையும் இல்ல, விமோசனமும் இல்ல.

**விவசாயி:** ஆமா, இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டியாகணும்!

**சிவா:** நம்ம வேர்வைக்கு ஒரு விலை வேணும். சரி, நாளைக்கு நாம எல்லாரும் நெல்ல வெளியூர்ல விற்கிறோம். பாலையா என்னதான் பண்ணிடுவான்னு பார்த்திரலாம்.

**விவசாயிகள்:** ம்... என்ன செய்றான்னு பார்த்திரலாம் என்கின்றனர்.

இதுபோல இத்திரைப்படம் முழுவதும் பண்ணையாதிக்கத்திற்கு எதிராகக் கலைஞர் மிகக் கூர்மையான வசனங்களைத் தீட்டி யுள்ளார்.

இவ்வாறு மன்னராட்சிக்கும் ஜமீன்தாரி யத்திற்கும், பண்ணைக் கொடுங்கோன்மைக்கும் எதிராக சினிமாவில் வசனம் எழுதியதோடு மட்டுமல்லாமல், தனது ஆட்சிக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் ஒழியவும் கூலி ஏழை மற்றும் குத்தகை விவசாயிகள் சுதந்திரம் பெற்று நிம்மதியாக வாழவும் சட்ட திட்டங் களைத் தீட்டி செயல்படுத்தியவர், கலைஞர்.

...காட்சி விரியும்

## சட்டமன்றத்தில் பொய்கள்?

'சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய், உண்மைக்கு மாறான தகவலைப் பதிவு செய்துள்ளார்' என கருத்துப் பகிர்ந்துள்ளார், மூத்த பத்திரிகையாளர் சே.இளங்கோவன்.

'2008-ல் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டம் செய்தோம். நமது தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களுக்கு நிம்மதியான வாழ்க்கை வேணும்னு கோரிக்கை வைத்தோம்...' என்று முதல்வர் பேசியதுதான் அது. சட்டமன்றத்தில் உண்மைக்குப் புறம்பான எதையும் பேசக்கூடாது என்பது மரபு. ஆனால், த.வெ.க.வினர் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? சபாநாயகரே திருத்தும் அளவுக்கு உண்மைக்கு மாறானவற்றையெல்லாம் சும்மா போகிற போக்கில் அடித்துவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முதல்வரும் விலக்கல்ல என்பதுதான் பரபரப்பே.

ஈழத் தமிழர்களுக்காக 2008-இல் இன்றைய முதல்வர் என்ன செய்தார்? அது பற்றி, அவரது அமைச்சரவையில் இன்று அமைச்சராக இருக்கும் வன்னியரசு அந்தக் காலத்தில் என்ன சொன்னார் தெரியுமா? அவர் அன்று, இனப்படுகொலை செய்த ராஜபக்ஷேவுக்கு எதிராகக் கையெழுத்துகள் பெற்று, ஐ.நா.வில் சமர்ப்பிப்பதற்காகப் பலரிடமும் கையெழுத்து வாங்கிக்கொண்டிருந்தார். அப்போது விஜய் என்ன செய்தார்?

'விஜய் அவர்களிடமும் கையெழுத்து வாங்குவதற்காகப் படப்பிடிப்புத் தளத்திற்குச் சென்றிருந்தோம். அப்போது அவர், I AM NOT INTERESTED என்று எங்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரிடமும் பேசினோம். அவரும் தங்களால் இதற்கு ஒப்புக் கொள்ள முடியாதென்று சொல்லிவிட்டார்' என்று வன்னியரசே அன்று பொதுவெளியில் பேட்டி கொடுத்திருக்கிறார். இதைத்தான் டிஜிட்டல் மீடியாவில் போட்டு, வெளுத்து வாங்குகிறார்கள்.

சரி, அன்று ஈழத் தமிழர்களுக்காக மற்ற சினிமாக்காரர்களெல்லாம் ஆயிரக்கணக்கில் நிதியளித்தபோது, விஜய் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி எவ்வளவு தெரியுமா? வெறும் 500 ரூபாய்!

மாண்புமிகு முதல்வர் விஜய் அவர்கள், இன்னமும் சினிமாவிலிருந்து முற்றிலும் விடுபடாதவராகவே இருப்பதால், நாமும் எம்.ஜி.ஆர். நடித்த 'நேற்று இன்று நாளை' படப் பாடலை இங்கே நினைவூட்டி நிறைவு செய்ய ஆசைப்படுகிறோம்...

'ஏய்ப்பவர்க்கே காலம் என்று எண்ணிவிடாதே
பொய் எத்தனை நாள் கை கொடுக்கும் மறந்துவிடாதே
ஒரு நாள் இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு!' என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



சேப்பாக்கம்
வே.பா.பிரபாகரன்



### ஜெயலலிதா என்மீது அவதூறு வழக்கு!

15.05.2013 அன்று, இராமநாதபுரத்தில் சேது சமுத்திர திட்டம் நிறைவேற்றக் கோரி எழுச்சிப் பொதுக்கூட்டத்தை நடத்தியது கழகம். கழகப் பொருளாளர் அண்ணன் டி.ஆர்.பாலு உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட அந்த பொதுக்கூட்டத்தில், நான் பேசியதற்காக என்மீது அவதூறு வழக்கு தொடுத்தது, அம்மையார் ஜெயலலிதா அரசு. அதற்காக நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தபோது, வழக்கு விவரங்களை எடுத்துக்கொண்டு கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்று தலைவரிடம் காட்டினேன். பார்த்துவிட்டு, "என்ன பேசினாய்?" என்று கேட்டுக்கொண்டு, "அப்படிப் பேசியிருக்கக் கூடாது" என்று கூறியதுடன் "பார்த்துக்கொள்ளலாம்" என்று பரிவுடன் அனுப்பிவைத்தார். பிறகு, அந்த வழக்கு தள்ளுபடி ஆனது. அந்த வழக்கு மட்டுமல்ல; கழக வாழ்க்கையிலும் நம் தலைவர் கொடுத்த நம்பிக்கையை எந்நாளும் மறக்க முடியாது.

– சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன்
தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், 59-அ, வட்டக் கழகச் செயலாளர்,
துறைமுகம் மேற்குப் பகுதி, சென்னை கிழக்கு மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## மலரும் நினைவுகள்... / ம் ல வு ரு க

### தேச துரோக வழக்கும் சாட்சியும்...

1949 செப்டம்பர் மாதத்தில், சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் தலைவர், புலவர் பு.செல்வராஜ் எழுதிய, 'கறுஞ்சட்டை ஒழிய வேண்டுமா?' என்கிற நூல் தேசத்துரோக வழக்கில் தடை செய்யப்பட்டு, அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில், அப்போது பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிவந்த பேராசிரியர் க.அன்பழகன், சாட்சியாக விசாரிக்கப்பட்டார். வழக்கு 10 மாதங்கள் நடைபெற்ற நிலையில், 'புலவர் செல்வராஜ் குற்றவாளியல்ல' என 28.08.1950 அன்று, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900